செ.வெ.எண்: 49 நாள்: 23.09.2019

## கரூர் மாவட்டம்

## சமூகநலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான சேவை மற்றும் பாதுகாப்பு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் பார்வையிட்டார்

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட சமூகநலத்துறையின் சார்பில், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய பெண்களுக்கான சேவை மற்றும் பாதுபாப்பு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் இன்று (23.09.2019) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பெண்கள் தனிப்பட இடத்திலோ அல்லது பொது இடத்திலோ வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் தேவைப்படும் ஆலோசனைகளை உடனடியாகவும் அவசர கால தேவை அடிப்படையிலும், எளிதாக பெற வழிவகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இந்த மையத்தின் மூலம் பெண்களின் பாதுகாப்பிற்கான அவசர சேவை மற்றும் ஆலோசனைகள், புகார் அளிக்கும் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ வசதி, சட்ட உதவிகள், மனநல ஆலோசனைகள் மற்றும் தற்காலிகமாக தங்கும் வசதிகள் செய்துகொடுக்கப்படும். தற்சமயம் கரூர் வெண்ணமலையில் அன்புக்கரங்கள் இல்லத்தில் இந்த மையம் இயங்கி வருகின்றது.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் குறித்து 181 என்ற கட்டணமில்லா தொலைபேசயில் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கப்படும் புகார்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட மாவட்டத்தில் உள்ள பொறுப்பு அலுவலரிடம் அந்த புகார் தெரிவிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, பெண்கள் இந்தவாய்ப்பை முறையாகப் பயன்படுத்திகொள்ள வேண்டும்.

மோலும் இந்த மையத்தின் மூலம் இதுவரை வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் 32 பெண்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரவிபாலா, மண்மங்கலம் வட்டாட்சியர் திரு.செந்தில், அன்புக்கரங்கள் நிர்வாகி திரு.சேகர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.